RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 201 | ஜூலை.24 2025 வியாழக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

## தமிழகம் முழுவதும் 100 நாட்களுக்கு அன்புமணி சுற்றுப்பயணம்



சென்னை: ஜூலை.24-

தமிழகம் முழுவதும் 100 நாட்களுக்கு தமிழக மக்கள் உரிமை மீட்பு பயணம் என்ற பெயரில் பாமக தலைவர் அன்புமணி சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார். வரும் 25ம் தேதி திருப்போரூரில் இருந்து தொடங்குகிறார்.

இதுதொடர்பாக நேற்று பாமக தலைமை அலுவலகம் வெளியிட்ட அறிக்கை: தமிழகத்தில் நடைபெற்று வரும் மக்கள்விரோத, சமூகநீதிக்கு எதிரான முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான திமுக அரசை அகற்ற வேண்டும்.

இந்திய அரசியலமைப்பு சட்டத்தால் குடிமக்களுக்கு வழங்கப்பட்டுள்ள 10 வகையான உரிமைகளை மீட்டெடுக்கும் நோக்குடன் பாமக தலைவர் அன்புமணி வரும் 25ம் தேதி திருப்போரூரில் தொடங்கி தமிழகம் முழுவதும் 100 நாள்களுக்கு தமிழக மக்கள் உரிமை மீட்பு பயணத்தை மேற்கொள்ள முடிவு செய்திருக்கிறார்.

சமூக நீதிக்கான உரிமை, வன்முறையில்லா வாழ்வுக்கான மகளிர் உரிமை, வேலைக்கான உரிமை, விவசாயம் மற்றும் உணவுக்கான உரிமை, ஆரோக்கியமான சுற்றுச்சூழலுக்கான உரிமை உட்பட 10 அம்சங்களை முன்வைத்து இந்த பயணம் மேற்கொள்ளப்படவுள்ளது.

பசுமைத் தாயகம் நாளாக கொண்டாடப்படும் பாமக நிறுவனர் ராமதாஸ் பிறந்தநாளான ஜூலை 25ம் தேதி திருப்போரூரில் தொடங்கி முக்கிய தொகுதிகள் வழியாக தமிழ்நாடு நாளான நவ.1ம் தேதி தருமபுரியில் சுற்றுப்பயணம் நிறைவடையவுள்ளது.

இதன்படி ஜூலை 25 திருப்போரூர் (தொடக்க விழா), ஜூலை 26 செங்கல்பட்டு, உத்திரமேரூர், ஜூலை 27 காஞ்சிபுரம், ஸ்ரீபெரும்புதூர், ஜூலை 28 அம்பத்தூர், மதுரவாயல், ஜூலை 31 கும்மிடிப்பூண்டி, ஆக.1 திருவள்ளூர், திருத்தணி, ஆக.2 சோளிங்கர், ராணிப்பேட்டை, ஆக.3 ஆற்காடு, வேலூர், ஆக.4 வாணியம்பாடி, திருப்பத்தூர். அடுத்தகட்ட பயண விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.



## தொடர் அமளி எதிரொலி: ஜூலை 29ல் ஆபரேஷன் சிந்தூர் குறித்து நாடாளுமன்றத்தில் விவாதம்

புதுடெல்லி: ஜூலை.24-

நாடாளுமன்றத்தின் மக்களவை மற்றும் மாநிலங்களவையில் வரும் ஜூலை 29 அன்று ஆபரேஷன் சிந்தூர் விவகாரம் குறித்து விவாதம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடரில் ஜூலை 29 அன்று ஆபரேஷன் சிந்தூர் குறித்த விவாதம் நடைபெறும் என்றும், மக்களவையில் 16 மணிநேரமும், மாநிலங்களவையில் 9 மணிநேரமும் விவாதத்துக்காக ஒதுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இன்று நடைபெற்ற அலுவல் ஆலோசனைக் குழு (பிஏசி) கூட்டத்திற்குப் பிறகு இது குறித்த முடிவு இறுதி செய்யப்பட்டது.

இந்த விவாதத்தின் போது எதிர்க்கட்சிகளின் கேள்விகளுக்கு பிரதமர் நரேந்திர மோடி, உள்துறை அமைச்சர் அமித் ஷா மற்றும் பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் ஆகியோர் பதிலளிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பஹல்காம் பயங்கரவாதிகள் தாக்குதல் மற்றும் ஆபரேஷன் சிந்தூர் குறித்து விரிவான விவாதம் நடத்த எதிர்க்கட்சிகள் கோரிக்கை வைத்து வருகின்றன, இதனால் நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் தொடர்ந்து முடக்கப்பட்டு வருகின்றன.

நாடாளுமன்ற மழைக்காலக் கூட்டத் தொடர் கடந்த 21ம் தேதி தொடங்கியது. ஆபரேஷன் சிந்தூர், பிஹார் வாக்காளர் பட்டியல் திருத்தம் உள்ளிட்ட பிரச்சினைகளை கூட்டத் தொடர் தொடங்கியது முதல் எதிர்க்கட்சிகள் எழுப்பி வருகின்றன. அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து விட்டு இவற்றை விவாதத்துக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என எதிர்க்கட்சிகள் இரு அவைகளிலும் வலியுறுத்தி வருகின்றன.

எனினும், மக்களவையில் சபாநாயகரும், மாநிலங்களவையில் அதன் தலைவரும் இதற்கு ஒப்புக்கொள்ளவில்லை. கேள்வி நேரம் உட்பட அவையின் பிற அலுவல்கள் திட்டமிட்டபடி நடக்கும் என்றும், அதேநேரத்தில், எதிர்க்கட்சிகள் எழுப்பும் பிரச்சினைகளும் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்றும் அவர்கள் கூறி வருகின்றனர். இதனால், நேற்று முன்தினமும், நேற்றும் இரு அவைகளும் அடுத்தடுத்து ஒத்திவைக்கப்பட்டன.

நேற்று (ஜூலை 23) காலை 11 மணிக்கு இரு அவைகளும் கூடியபோதும், எதிர்க்கட்சிகள் தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தினர். மக்களவையில் சபாநாயகரின் இருக்கையை சூழ்ந்து கொண்ட எதிர்க்கட்சி உறுப்பினர்கள், பதாகைகளை ஏந்தியவாறு தங்கள் கோரிக்கையை வலியுறுத்தி கோஷங்களை எழுப்பினர். எதிர்க்கட்சி எம்பிக்களின் அமளி தொடர்ந்து நீடித்ததால், அவையை 12 மணி வரை ஒத்திவைப்பதாக சபாநாயகர் ஓம் பிர்லா அறிவித்தார்.

இதேபோல், மாநிலங்களவை அதன் துணைத் தலைவர் ஹரிவன்ஷ் தலைமையில் இன்று காலை 11 மணிக்குக் கூடியது. அங்குள்ள எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அமளியில் ஈடுபட்டனர். எதிர்க்கட்சி உறுப்பினர்களின் அமளி தொடர்ந்ததால், அவையை இன்று முழுவதும் ஒத்திவைப்பதாக ஹரிவன்ஷ் அறிவித்தார். இதனால், மழைக்காலக் கூட்டத் தொடரின் 3ம் நாளான இன்றும் இரு அவைகளும் முழுமையாக முடங்கின.

## ராஜேந்திர சோழனின் பிறந்தநாளில் சோழகங்கம் ஏரியில் நீர்வள ஆதார மேம்பாட்டுப் பணி

### முதல்வர் ஸ்டாலின் அறிவிப்பு




சென்னை: ஜூலை.24-

ராஜேந்திர சோழன் உருவாக்கிய அரியலூர் சோழகங்கம் ஏரியில் நீர்வள ஆதார மேம்பாடு, சுற்றுலா மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படும் என முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் தளத்தில், "கங்கை கொண்டான், கடாரம் கொண்டான் எனப் பெரும்புகழ் எய்திய தமிழ் மாமன்னர் ராஜேந்திர சோழனின் பிறந்தநாளான ஆடித் திருவாதிரையை அரசு விழாவாக ஆண்டுதோறும் கொண்டாடிட 2021 ஆம் ஆண்டு ஆணை பிறப்பித்தது நமது திராவிட மாடல் அரசு!

அவரது தலைநகரான கங்கை கொண்ட சோழபுரத்தில் சோழப் பேரரசின் வரலாற்றுச் சிறப்புகளையும் கடல் கடந்த வணிகத் தொடர்புகளையும் பறைசாற்றும் விதமாக அருங்காட்சியகம் அமைக்கப்படும் என அறிவித்து, அதற்கும் கடந்த ஜனவரி மாதம் அடிக்கல் நாட்டினேன். காண்போரைக் கவர்ந்திடும் வண்ணம் அது எழுந்து வருகிறது.

இவற்றின் தொடர்ச்சியாக, ராஜேந்திர சோழனின் பிறந்தநாளில், அவர் உருவாக்கிய சோழகங்கம் ஏரியில் நீர்வள ஆதார மேம்பாட்டுப் பணிகளும் சுற்றுலா மேம்பாட்டுப் பணிகளும் மேற்கொள்ளப்படும் என்று அறிவிப்பதில் பெருமகிழ்ச்சி." இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## இங்கிலாந்து, மாலத்தீவுகளுக்கான அரசு முறைப் பயணம்: டெல்லியில் இருந்து புறப்பட்டார் பிரதமர் மோடி



புதுடெல்லி: ஜூலை.24-

இங்கிலாந்து மற்றும் மாலத்தீவு நாடுகளுக்குச் செல்வதற்காக பிரதமர் நரேந்திர மோடி, புதுடெல்லியில் இருந்து தனி விமானத்தில் நேற்று (புதன்கிழமை) புறப்பட்டார்.

முன்னதாக தனது பயணம் தொடர்பாக அறிக்கை வெளியிட்டுள்ள பிரதமர் நரேந்திர மோடி, "ஜூலை 23 முதல் 26 வரை இங்கிலாந்து மற்றும் மாலத்தீவுகளுக்கு நான் பயணம் மேற்கொள்கிறேன். இந்தியாவும் இங்கிலாந்தும் சமீப ஆண்டுகளாக குறிப்பிடத்தக்க அளவில் விரிவான கூட்டாண்மையை பகிர்ந்து கொள்கின்றன. இரு நாடுகளுக்கு இடையேயான ஒத்துழைப்பு, வர்த்தகம், முதலீடு, தொழில்நுட்பம், புதுமை, பாதுகாப்பு, கல்வி, ஆராய்ச்சி, நிலைத்தன்மை, சுகாதாரம், மக்களிடையேயான உறவு என பரந்து விரிந்துள்ளது.

பிரதமர் கெய்ர் ஸ்டார்மெர் உடனான எனது சந்திப்பின்போது, இரு நாடுகளின் செழிப்பு, வளர்ச்சி, வேலைவாய்ப்பு ஆகியவற்றை அதிகரிக்கச் செய்வதற்கான பொருளாதார ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவதற்கான வாய்ப்பைப் பெறுவோம். இந்த பயணத்தின்போது, மன்னர் மூன்றாம் சார்லஸை சந்திப்பதற்கும் நான் ஆவலாக உள்ளேன்." என தெரிவித்துள்ளார்.

மேலும் அவர், "மாலத்தீவு அதிபர் முகமது முய்சுவின் அழைப்பின் பேரில் அந்நாட்டின் 60வது சுதந்திர தின கொண்டாட்டங்களில் கலந்து மாலத்தீவுக்குச் செல்ல உள்ளேன். இந்த ஆண்டு இரு நாடுகளுக்கும் இடையே ராஜதந்திர உறவுகள் ஏற்பட்டதன் 60வது ஆண்டாகும். விரிவான பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் கடல்சார் பாதுகாப்பு தொடர்பான கூட்டுப்பார்வையை முன்னேற்றவும், இந்திய பெருங்கடல் பிராந்தியத்தில் அமைதி, செழிப்பு, ஸ்திரத்தன்மைக்கான ஒத்துழைப்பை வலுப்படுத்தவும் அதிபர் முய்சு மற்றும் பிற தலைவர்களுடனான எனது சந்திப்புகளை நான் எதிர்நோக்குகிறேன்.

இந்த பயணம் உறுதியான விளைவுகளைத் தரும், நமது மக்களுக்குப் பயனளிக்கும். அதோடு, நமது அண்டை நாடுகளுக்கு முன்னுரிமை அளிக்கும் நமது கொள்கையை முன்னேற்றும் என்று நான் நம்புகிறேன்." என தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்து இந்தியா இடையே தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் குறித்து இரு நாடுகளும் 3 ஆண்டுகளுக்கு மேலாக பேச்சுவார்த்தை நடத்தி வந்தன. அதன் தொடர்ச்சியாக, கடந்த மே மாதம் இரு நாடுகளும் தடையற்ற வர்த்தகத்துக்கு கொள்கை ரீதியாக ஒப்புக்கொண்டன. பிரதமர் மோடியின் பிரிட்டன் பயணத்தின்போது, இந்த ஒப்பந்தம் கையெழுத்தாகும் என்று தெரிகிறது.

அப்படி ஒப்பந்தம் ஏற்பட்டால், இந்தியாவில் இருந்து பிரிட்டனுக்கு ஏற்றுமதியாகும் பொருட்களுக்கு 99 சதவீதம் வரி குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதனால், இந்திய ஏற்றுமதியாளர்கள் பயனடைவார்கள். அதேபோல, பிரிட்டனில் இருந்து இந்திய சந்தைகளுக்கு விஸ்கி மதுபான வகைகள் வரத்து, ஆட்டோமொபைல், நிதி சேவைகள் அதிகரிக்கும் என்று கூறப்படுகிறது.

## கணிதம், அறிவியல் ஆசிரியர்கள் உடற்கல்வி பாட வேளையை கடன் வாங்காதீர்கள்: உதயநிதி வேண்டுகோள்



சென்னை: ஜூலை.24-

பள்ளிகளில் கணிதம், அறிவியல் ஆசிரியர்கள் உடற்கல்வி பாடவேளையை கடன் வாங்காதீர்கள் என துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வேண்டுகோள் விடுத்துள்ளார். பள்ளிக் கல்வித் துறை சார்பில் 202425ம் கல்வியாண்டில் நடைபெற்ற சர்வதேச (135), தேசிய (1,350), மாநில (4,293) அளவிலான விளையாட்டு போட்டிகளில் பதக்கம் வென்ற 5,788 மாணவ, மாணவிகளுக்குபாராட்டு சான்றிதழ் வழங்கும் விழா சென்னையில் நேற்று நடைபெற்றது.

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தலைமை வகித்து மாணவர்களுக்கு சான்றிதழ்களை வழங்கினார். பள்ளிக் கல்வித் துறை சார்பில் தொடங்கப்பட்ட ஆற்றல் மிகு உடற்கல்வி திட்டத்தின் கீழ், மாணவர்களின் நல்வாழ்வை உறுதிபடுத்துவதை நோக்கமாக கொண்டு 'உடற்கல்வி ஆசிரியர் வளநூல்' எனும் புத்தகத்தை 3 தொகுதிகளாக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வெளியிட்டார். முதல் பிரதியை பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பெற்றுக்கொண்டார்.

அப்போது உதயநிதி ஸ்டாலின் பேசியதாவது: பாடப்புத்தகத்தில் இருக்கும் கல்வி மட்டுமின்றி, விளையாட்டு மூலமாகவும் நிறைய விஷயங்களை மாணவர்கள் கற்றுக்கொள்ள முடியும். நட்பு, நம்பிக்கை, ஒத்துழைப்பு, குழுவாக பணியாற்றுதல், உத்திகளை திட்டமிடுதல், அதை செயல்படுத்துதல் போன்ற வாழ்க்கைக்கு தேவையான அனைத்தையும் விளையாட்டு நமக்கு கற்றுக்கொடுக்கும்.

படிப்பிலும், விளையாட்டிலும் ஈடுபடும் மாணவர்கள் தனிச்சிறப்புடன் இருப்பார்கள். எனவே கல்வி, விளையாட்டு இரண்டிலும் மாணவர்கள் கவனம் செலுத்த வேண்டும். தமிழகத்தில் விளையாட்டு வீரர்களை ஊக்கப்படுத்துவதற்காக தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை மூலம் நிதியுதவி மற்றும் விளையாட்டு உபகரணங்கள் வாங்குவதற்கான உதவிகளை செய்து வருகிறோம்.

தகுதியுள்ள வீரர்கள் https://tn-champions.sdat.in என்ற இணையதளத்தில் அதற்காக விண்ணப்பித்து பயனடையுமாறு கேட்டுக் கொள்கிறேன். நடப்பாண்டுக்கான தமிழ்நாடு முதல்வர் கோப்பைக்கான முன்பதிவு தொடங்கப்பட்டுள்ளது. ரூ.36 கோடி பரிசுத் தொகையாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதில் மாணவர்கள் அனைவரும் கலந்துகொள்ள வேண்டும். மாணவர்கள் சார்பாக, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் முன்பு ஆசிரியர்களுக்கு நான் ஒரு கோரிக்கை வைக்க விரும்புகிறேன். உடற்கல்வி பாட வேளையை (பிஇடி பீரியட்) எந்த ஆசிரியரும் கடன் வாங்கி அதில் மற்ற பாடங்களை நடத்த வேண்டாம்.

வேண்டுமானால் கணிதம், அறிவியல் பாடவேளையை பிஇடி பீரியடுக்காக கடன் கொடுங்கள். பிஇடி பீரியடுகள் என்பது மாணவர்களின் உரிமை. அதில் மாணவர்கள் நிச்சயமாக விளையாட வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

இந்நிகழ்வில் அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர் பாபு, பள்ளிக் கல்வித் துறை செயலர் பி.சந்திரமோகன், இயக்குநர் ச.கண்ணப்பன், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத் தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி, மாநில பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் துணைத் தலைவர் பி.வி.பி.முத்துக்குமார், தனியார் பள்ளி சங்கத் தலைவர் அரசகுமார், தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கத்தின் மாநில ஒருங்கிணைப்பாளர் தியாகராஜன், பரந்தாமன் எம்எல்ஏ உள்ளிட்டோர் பங்கேற்றனர்.



■ மதுரை மாவட்டம் திருமங்கலம் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட மறவன்குளம்,கப்பலூர் ஆகிய ஊராட்சிகளுக்கு நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு திட்ட முகாமை வருவாய் கோட்டாட்சியர் சிவஜோதி குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்தார். இந்த நிகழ்வில் வட்டாட்சியர் கிளமண்ட் சுரேஷ், வட்டார வளர்ச்சி அலுவலர் சந்திரகலா, மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் திருப்பதி, கப்பலூர் ஊராட்சி செயலாளர் அழகர்சாமி, மறவன் குளம் ஊராட்சி செயலாளர் திக் விஜயன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



■ சிவகங்கை மாவட்டம் மானாமதுரை நகராட்சிக்கு செந்தமான வளமீட்பு பூங்காவில் தீ விபத்து ஏற்பட்டது இதுகுறித்து மானாமதுரை தீயணைப்பு நிலையத்துக்கு தகவல் அளித்தனர். ஒரு மணி நேரம் தீயணைப்பு வீரர்கள் போராடி தீயை அணைத்தனர். கடும் வெயில் தாக்கத்தால் குப்பையில் கிடந்த கண்ணாடி உள்ளிட்ட எரி பொருள் மூலம் தீ விபத்து ஏற்பட்டதா? வேறு ஏதாவது காரணமா? என்ற கோணத்தில் போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்..




■ மதுரை மாவட்டம் கள்ளிக்குடி ஊராட்சி ஒன்றியம் சிவரக்கோட்டை ஊராட்சியில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு திட்ட முகாமை தெற்கு மாவட்ட திமுக செயலாளர் மணிமாறன் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்த நிகழ்வில் திருமங்கலம் நகராட்சி தலைவர் ரம்யா முத்துக்குமார், நகராட்சி துணைத் தலைவர் ஆதவன் அதியமான்,ஒன்றிய செயலாளர்கள் ராமமூர்த்தி மதன், கள்ளிக்குடி தாசில்தார் சிவக்குமார், கள்ளிக்குடி வட்டார வளர்ச்சி அலுவலர் தங்கவேலு, சிவரக்கோட்டை எஸ் பி நத்தம் ஊராட்சி செயலாளர் பாண்டி, செங்கப்படை ஊராட்சி செயலாளர் நவநீதகிருஷ்ணன், கரிசல் காலம்பட்டி நேசனேரி ஊராட்சி செயலாளர் தனசேகரன் மற்றும் அனைத்து துறை சார்ந்த அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்





வணிகவரி மற்றும் பதிவுத்துறை, பொதுப்பணி துறை ஆகியவைகளின் சார்பில், திருப்புவனம் பேரூராட்சி பகுதியில் ரூ.215.00 இலட்சம் மதிப்பீட்டிலும் மற்றும் மானாமதுரை நகராட்சி பகுதியில் ரூ.185.90 இலட்சம் மதிப்பீட்டிலும் என மொத்தம் ரூ.400.90 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள

# புதிய சார் பதிவாளர் அலுவலகங்களுக்கான கட்டுமானப் பணிகளை அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் அடிக்கல் நாட்டினார்

மானாமதுரை. ஜூலை.24

சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் பேரூராட்சி மற்றும் மானாமதுரை நகராட்சி பகுதிகளில், வணிகவரி மற்றும் பதிவுத்துறை, பொதுப்பணித்துறை ஆகியவைகளின் சார்பில், கட்டப்படவுள்ள புதிய சார் பதிவாளர் அலுவலகங்களுக்கான கட்டுமானப் பணிகளை நேற்று (22.7.2025) மாவட்ட வருவாய் அலுவலர் மரு.எஸ்.செல்வசுரபி தலைமையில், மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் ஆ.தமிழரசி ரவிக்குமார் முன்னிலையில் அடிக்கல் நாட்டி, தொடங்கி வைத்து தெரிவிக்கையில்,

தமிழ்நாடு முதலமைச்சர் நல்லாட்சியில், தமிழகத்தில் அரசின் அனைத்து துறைகளும் சிறப்பாக செயல்பட்டு, கல்வி, பொருளாதாரம், வேலைவாய்ப்பு உள்ளிட்டவைகள் அனைத்தும், அனைத்து தரப்பு மக்களுக்கும் கிடைக்கப்பெற செய்யும் வகையில், சிறப்பான நிர்வாகம் தமிழகத்தில் நடைபெற்று வருகிறது. மேலும், பொதுமக்களின் அடிப்படை தேவைகளை நிவர்த்தி செய்யும் பொருட்டும், நகர்ப்புறம் மற்றும் கிராமப்புறங்களில் பல்வேறு திட்டங்கள் அறிவிக்கப்பட்டு, அத்திட்டங்களின் கீழ் பல்வேறு மேம்பாட்டு பணிகளும் தமிழக முழுவதும் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், சிவகங்கை மாவட்டத்தில் நான்கு சட்டமன்ற தொகுதிகளிலும் எவ்வித பாகுபாடின்றி, பல்வேறு வளர்ச்சிப் பணிகள் அனைத்து சட்டமன்ற தொகுதிகளிலும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மக்களுக்கான திட்டங்களை உரிய முறையில் கொண்டு சேர்க்கும் அரசுத்துறைகளை சார்ந்த அலுவலகங்கள் பல்வேறு நவீன உட்கட்டமைப்பு வசதிகளுடன் அமைந்திட வேண்டும் என்ற அடிப்படையிலும், சொந்த கட்டிடத்தில் இயங்க வேண்டும் என்ற அடிப்படையிலும், அதற்கென தமிழ்நாடு முதலமைச்சர் துறை ரீதியாக நிதி ஒதுக்கீடு செய்தும் சிறப்பான நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறார்கள்.

அந்த வகையில், 20242025 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின் போது, சட்டமன்றப் பேரவையில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் அவர்களால் " பதிவுத்துறைக்கு சொந்தமான 36 சார்பதிவாளர் அலவலவகங்களுக்கு ரூ.100 கோடி செலவில் மேம்படுத்தப்பட்ட வசதிகளுடன் கூடிய புதிய கட்டடங்கள் கட்டப்படும்" என அறிவிக்கப்பட்டது.

சிவகங்கை பதிவு மாவட்டத்தில் திருப்புவனம் மற்றும் மானாமதுரை பகுதியில் புதிய சார் பதிவாளர் அலுவலகம் கட்டுவதற்கு ஆணை வெளியிடப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, இன்றையதினம் புதிய சார் பதிவாளர் கட்டிடங்களுக்கான அடிக்கல் நாட்டும் பணி சிறப்பாக நடைபெற்று வருகிறது. அதன்படி, திருப்புவனம் சார் பதிவாளர் அலுவலகமானது, திருப்புவனம் பேரூராட்சி பகுதியில் 434.20 சதுரமீட்டர் அளவில் (தரைத்தளம் மற்றும் (முதல்தளம்) ரூ.215.00 இலட்சம் மதிப்பீட்டிலும்,

மானாமதுரை சார் பதிவளார் அலுவலகமானது, மானாமதுரை நகராட்சி பகுதியில் 380.00 சதுர மீட்டர் அளவில் ரூ.185.90 இலட்சம் மதிப்பீட்டிலும் என 2 புதிய சார் பதிவாளர் அலுவலகங்கள் மொத்தம் ரூ.400.90 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ளது.

பொதுமக்கள் பயன்பெறும் வகையிலும், பதிவிற்கான ஆவணங்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற அடிப்படையிலும்,கூடுதல் வசதிகளுடன் மானாமதுரை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட திருப்புவனம் பேரூராட்சி மற்றும் மானாமதுரை நகராட்சி ஆகிய பகுதிகளில் புதிய இரண்டு சார் பதிவாளர் அலுவலகங்களுக்கு நேற்று அடிக்கல் நாட்டப்பட்டமைக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சருக்கும் இப்பகுதி மக்களின் சார்பில் மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், இக்கட்டுமானப் பணிகளை 7 மாதகால ஒப்பந்த அடிப்படையில் முடித்திட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆனால், இப்பணிகளை 5 மாதகாலத்திற்குள் விரைந்து, தரமான முறையில் முடிக்கப்பெற்று, பொதுமக்களின் பயன்பாட்டிற்கு வழங்கிட ஒப்பந்ததாரர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இது போன்று, பொதுமக்களுக்கு பயனுள்ள வகையிலான திட்டங்கள் தமிழகத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் அறிவிக்கப்பட்டு, சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. பொதுமக்கள் திட்டப்பயன்களை பெறுவதற்கு அரசை நாடி வந்த நிலையில், அதனை மாற்றி மக்களுக்கு பயனுள்ள வகையில், மக்களைத் தேடி அரசு என்ற உன்னத நிலையை ஏற்படுத்திடும் வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் "உங்களுடன் ஸ்டாலின்" என்ற திட்டத்தினை அறிவித்து,

பொதுமக்களின் தேவையை நிவர்த்தி செய்வதற்கென அந்தந்த பகுதிகளில் முகாம்களை நடத்தி, தகுதியான பயனாளிகளுக்கு உரிய பயன்களை உடனடியாக வழங்குவதற்கு வழிவகை ஏற்படுத்தி, பொதுமக்களை பயன்பெற செய்து வருகிறார்கள். பிற மாநிலங்களும் தமிழக அரசின் திட்டங்களை பின்பற்றிடும் வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொலைநோக்கு பார்வையுடன் அரசின் திட்டங்கள் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது என கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளில், திருப்புவனம் பேரூராட்சி தலைவர் த.சேங்கைமாறன், மானாமதுரை நகர்மன்றத்தலைவர் சோ. மாரியப்பன் கென்னடி, நகர மன்றம் துணைத் தலைவர் பாலசுந்தர் ,பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் இளங்கோவன், சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் விஜயகுமார், மாவட்ட பதிவாளர்கள் வி.ரமேஷ் (நிர்வாகம் சிவகங்கை) மற்றும் கிருஷ்ணமூர்த்தி (தணிக்கை), சார் பதிவாளர்கள் மீனாட்சி சுந்தரம் (திருப்புவனம்), மகாலட்சுமி (மானாமதுரை), மானாமதுரை நகராட்சி ஆணையாளர் (பொ) கிருஷ்ணராம், மானாமதுரை நகர்மன்ற துணைத்தலைவர் சே.பாலசுந்தர் திருப்புவனம் பேரூராட்சி துணைத்தலைவர் அ.ரகமத்துல்லாகான், பொதுப்பணித்துறை உதவி செயற்பொறியாளர் வான்மதி, வட்டாட்சியர்கள் விஜயகுமார் (திருப்புவனம்) மற்றும் கிருஷ்ணகுமார் (மானாமதுரை) மானாமதுரை முன்னாள் ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர் லதா அண்ணாதுரை முன்னாள் துணைத் தலைவர் முத்துசாமி, திமுக ஒன்றிய செயலாளர்கள் துரைராஜாமணி அண்ணாதுரை, திமுக நகரச் செயலாளர் பொன்னுசாமி,உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.




# வேலூரில், தந்தை பெரியார் அரசு பொறியியற்க் கல்லூரியில் 32 மற்றும் 33 ஆம் ஆண்டு பட்டமளிப்பு விழா

வேலூர். ஜூலை.24

வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா, தொரப்பாடி அடுத்த சித்தேரி, தந்தை பெரியார் அரசு பொறியியற்க் கல்லூரியில் 32 மற்றும் 33 ஆம் ஆண்டு பட்டமளிப்பு விழா கல்லூரி முதல்வர் டாக்டர். பி.கே. பழனி தலைமையில் நடைபெற்றது.

இந்த பட்டமளிப்பு விழாவில் சுமார் 750 மாணவர்களுக்கு பட்டம் வழங்கப்பட்டது. இதில் சிறப்பு அழைப்பாளராக இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனத்தில் (மிஷிஸிளி) விஞ்ஞானியாக பணிபுரியும் காயத்ரிதேவி மற்றும் சுயநிதி பொறியியல் கல்லூரிகள் கட்டணம் நிர்ணயம் குழு தமிழ்நாடு, தனி அலுவலர் முனைவர். க.பார்த்திபன் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றி பட்டம் பெரும் மாணவர்களுக்கு வாழ்த்து தெரிவித்து பாராட்டி பட்டங்களை வழங்கினர்.

இந்நிகழ்ச்சியில் பேசிய இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனத்தின் விஞ்ஞானி இக்கல்லூரியில் 1991 ஆம் ஆண்டு பிஇ எலக்ட்ரிகல் அண்ட் எலக்ட்ரானிக் இன்ஜினியரிங் பயின்றவர் என்றும், இவர் உரையில் மகளிர்களின் மகத்துவத்தை பற்றியும் அவர்களின் பங்கை பற்றியும், இந்திய விண்வெளி ஆய்வில் பெண்களின் பங்கு மற்றும் பொறியியல் படித்த பட்டதாரிகளுக்கு இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனத்தில் வேலை வாய்ப்புகளைப்பற்றி எடுத்துரைத்து பேசினார். பெண் கல்வி மற்றும் அவர்களின் உயர்க்கல்வி பற்றிய முக்கியத்துவத்தையும் எடுத்துரைத்து, கல்லூரியை புகழாரம் சூட்டி இக்கல்லூரியில் படித்த பல மாணவர்கள் பல்வேறு துறைகளிலும், இந்திய விண்வெளி ஆய்வு மையத்தில் பணியாற்றி வருவதாகவும, பட்டம் பெரும் மாணவர்களை ஊக்குவித்து பாராட்டினார். சிறப்பு விருந்தினர் பார்த்திபன் பேசுகையில்: கடின உழைப்புக்கு ஈடு இணை ஏதுமில்லை என்றும், நானும் இக்கல்லூரியில் 1991ஆம் ஆண்டு இயந்திரவியல் துறையில் படித்தவர் எனவும், நம்மால் முடியாதது ஏதுமில்லை என்று முயன்று முன்னேற வாழ்த்துகளை தெரிவித்து பாராட்டினார். இவ்விழாவை பேராசிரியர் டாக்டர். பி.பிரவீன்ராஜ் ஒருங்கிணைத்து சிறப்பித்தனர். சிறப்பு விருந்தினர்களை டாக்டர். ந.கலையரசன் அறிமுகம் செய்து வைத்து, சிறப்புரையாற்றி, டாக்டர். எஸ்.முருகவேல் வரவேற்புரையாற்றுகையில், இந்த பட்டமளிப்பு விழா நடைபெற்றது. இந்த பட்டமளிப்பு விழாவில் மாணவர்கள், மாணவர்களின் பெற்றோர்கள், உறவினர்கள் மற்றும் கல்லூரி நிர்வாக பேராசிரியர்கள், ஆசிரியர்கள் என சுமார் 1500 பேருக்கும்மேல் கலந்து கொண்டு இந்த பட்டமளிப்பு விழாவை சிறப்பித்தனர். இதனைத் தொடர்ந்து அனைவருக்கும் அறுசுவை சைவம் மற்றும் அசைவம் உணவு வழங்கப்பட்டது.



# 24, 25ல் கோவை, தென்காசி உள்ளிட்ட 6 மாவட்டங்களில் கனமழை வாய்ப்பு

சென்னை, ஜூலை.24-

கோவை, தென்காசி உள்ளிட்ட 6 மாவட்டங்களில் வரும் 24, 25ம் தேதிகளில் கனமழைக்கு வாய்ப்பு உள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்து உள்ளது.

இது தொடர்பாக சென்னை மண்டல வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது: வடக்கு ஆந்திரா மற்றும் அதையொட்டிய பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல மேலடுக்கு சுழற்சி நிலவுகிறது. தென்னிந்தியப் பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல மேலடுக்கு சுழற்சி நிலவுகிறது. இவற்றின் தாக்கத்தால் தமிழகத்தின் ஓரிரு இடங்களிலும். புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இன்று இடி, மின்னலுடன் கூடிய. லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். ஓரிரு இடங்களில் மணிக்கு 40 முதல் 50 கி.மீ. வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும்.

நீலகிரி, தேனி, தென்காசி, கன்னியாகுமரி மாவட்டங்கள் மற்றும் கோவை, நெல்லை மாவட்டங்களின் மலைப் பகுதிகளில் ஓரிரு இடங்களில் வரும் 24, 25ம் தேதிகளில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது. சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய, லேசானது அல்ல மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது.

தமிழக கடலோரப் பகுதிகள், மன்னார் வளைகுடா, குமரிக்கடல், மத்திய மற்றும் அதையொட்டிய தெற்கு வங்கக்கடல் பகுதிகள், வடக்கு அந்தமான், ஆந்திர கடலோரப் பகுதிகள், தெற்கு மற்றும் மத்திய வங்கக்கடலின் சில பகுதிகள், தெற்கு அந்தமான் கடல் பகுதிகள், மத்திய மேற்கு அரபிக்கடலின் பெரும்பாலான பகுதிகள், தென்மேற்கு அரபிக்கடலின் சில பகுதிகள், மத்தியகிழக்கு அரபிக்கடலின் பெரும்பாலான பகுதிகள், கொங்கன் கோவா கர்நாடகா கேரளா கடலோரப் பகுதிகள் மற்றும் லட்சத்தீவு மாலத்தீவு பகுதிகளில் இன்றும், நாளையும் அதிகபட்சமாக மணிக்கு 60 கி.மீ. வேகத்தில் சூறாவளிக் காற்று வீசக்கூடும். எனவே, மீனவர்கள் இப்பகுதிகளுக்குச் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்படுகிறார்கள். இவ்வாறு செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# பரமக்குடியில் தேவேந்திரர் பண்பாட்டு கழக தேர்தலில் வெற்றிவாகை சூடிய சமூக நீதி போராளி தியாகி இமானுவேல் சேகரனாரின் பேரன் பணியை துவங்கும் முன் தாத்தாவின் நினைவிடத்தில் மலர் வளையம் வைத்து நெகிழ்ச்சியை ஏற்படுத்திய பேரன் சக்கரவர்த்தி

பரமக்குடி, ஜூலை.24

ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி சமூக நீதி போராளி தியாகி இமானுவேல் சேகரனார் பஞ்சாபில் இந்திய ராணுவத்தில் வேலை செய்து விட்டு இந்திய சுதந்திரப் போராட்டத்தில் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டதோடு தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில் நிலவிய சாதிய ஏற்றத்தாழ்வுகளுக்கு எதிராக குரல் கொடுத்து வந்தவர் இந்த நிலையில் இவரது பிறந்த நாளான அக்டோபர் 9ஆம் தேதி அவரது நூற்றாண்டு நிறைவு விழாவில் தமிழக அரசு அரசு விழாவாக அறிவித்து அங்கீகரித்தது ஒவ்வொரு ஆண்டும் இவரது நினைவு தினமான செப்டம்பர் 11ஆம் தேதி இவரது நினைவிடத்தில் பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள் சாதி சமயங்களை கடந்து இவருக்கு புகழஞ்சலி செலுத்துவது மட்டுமின்றி பல்வேறு மாநில மாவட்டங்களில் இருந்தும் மக்கள் இவருக்கு பால்குடம் மற்றும் பாரியெடுத்து கடவுளாகவே பாவித்து அவரது நினைவிடத்தில் சமர்ப்பித்து வழிபட்டு வருவது குறிப்பிடத்தக்கது இந்த நிகழ்ச்சி ஏற்பாடுகள் அனைத்தும் பரமக்குடி தேவேந்திர பண்பாட்டு கழகம் முன் நின்று நடத்தி வருவது வழக்கம் இந்த நிலையில் தேவேந்திரர் பண்பாட்டு கழகத் தேர்தல் ஆனது இரண்டு ஆண்டுக்கு ஒரு முறை மட்டுமே நடைபெற்று புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கும் நிலையில் நேற்றைய தினம் நடந்து முடிந்த தேர்தலில் தேவேந்திர பண்பாட்டு கழக தலைவர் பதவிக்கு போட்டியிட்ட சமூக நீதிப் போராளி தியாகி இமானுவேல் சேகரனாரின் பேரன் சக்கரவர்த்தி அதிகப்படியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்று பெற்றார் இதனை அடுத்து தனது பணியை துவங்கும் முன் தனது தாத்தா நினைவிடத்திற்கு சென்று மலர் தூவி மாலை அணிவித்து, மலர் வளையம் வைத்து வணங்கிவிட்டு பணியை துவங்க ஆரம்பித்தார் அப்போது செய்தியாளரை சந்தித்த அவர் தேவேந்திர குல வேளாளர் மக்கள் அனைவராலும் உற்று நோக்கக் கூடிய பட்டியல் வெளியேற்ற போராட்டத்திற்கு தொடர்ந்து பாடுபடுவேன் தாத்தா விட்டுச் சென்ற பணியினை முன் நின்று செய்வேன் என உணர்ச்சி பொங்க தெரிவித்தார்.



# வேலூரில் சுற்றுலா தொடர்பான தொழில் முனைவோர்கள் (டிராவல்ஸ்) மற்றும் இந்தியா டிராவல் மார்க்கெட் 5வது பொருட்காட்சி!

வேலூர். ஜூலை.24

வேலூர் மாவட்டம், வேலூர் அண்ணா சாலை, ஊரிஸ் கல்லூரி எதிரில், கண்ணா பியாஸ்டா ஹோட்டலில் 5வது பொருடாட்சியாக சுற்றுலா தொடர்பான தொழில் முனைவோர்கள் (டிராவல்ஸ்) மற்றும் இந்தியா டிராவல் மார்க்கெட் பொருட்காட்சி இந்தியா டிராவல்ஸ் மார்க்கெட் எக்சிபிஷன் ப்ராஜெக்ட் ஹெட் டி ஜே பி ராஜு தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக இந்தியா டூரிசம் சென்னை மினிஸ்ட்ரி ஆப் டூரிசம் கவர்ன்மெண்ட் ஆப் இந்தியா அலுவலர் லலிதா மற்றும் வேலூர் மாவட்ட சுற்றுலாத்துறை அலுவலர் பி.இலமுருகன் கலந்து கொண்டு குத்துவிளக்கேற்றி இந்த பொருட்காட்சியை தொடங்கி வைத்தனர். சுற்றுலா தொடர்பான தொழில் முனைவோர்கள் டிராவல்ஸ் வைத்திருப்பவரின் சுற்றுலா வளர்ச்சிக்கு வித்திடும் வகையில் இந்த பொருட்காட்சி நடத்தப்பட்டது. இந்த பொருட்காட்சி முதல் மைசூரிலும் இரண்டாவது மங்களூரிலும் மூன்றாவது மதுரையிலும் நான்காவது திருச்சியிலும் ஐந்தாவது இடமான பல்வேறு சுற்றுலா மாநிலங்களுக்கு தலைமையிடமாக வகிக்கும் புரட்சிமிகு வேலூரில் இந்த பொருட்காட்சி நடத்தப்பட்டது. இந்த பொருட்காட்சியில் சுமார் 500க்கும் மேற்பட்டோர் வருகை புரிந்து விவரங்களை சேகரித்து சுற்றுலா தொடர்பான தொழில் முனைவோர்கள் வளர்ச்சிக்கும் உள்ளூர் மற்றும் வெளியூர் சுற்றுலா பார்க்க வரும் மக்கள் மகிழ்ச்சி அடையும் வகையில் எவ்வாறெல்லாம் அவர்களுக்கு உதவுவது மற்றும் உரிய நேரத்தில் சுற்றுலா தலங்களை சுற்றி பார்க்க வித்திடும் வகையில் இந்த பொருட்காட்சி நடத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது. இதில் அசோசியேசன் ஆப் டொமஸ்டிக் டூர் ஆபரேஷன் ஆஃப் இந்தியா தலைவர் தமிழ்நாடு பி அசோக்குமார், செகரட்டரி தமிழ்நாடு பாலு.என், மற்றும் அந்தமான் நிக்கோபார் டூர் ஆபரேஷன் அசோசியேஷன் தலைவர் சிம்சன் ஆகியோர் கலந்து கொண்டு குத்துவிளக்கேற்றி சிறப்புரையாற்றி இந்த பொருட்காட்சியை சிறப்பித்தனர். இதில் ஆந்திர மாநிலம், தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா, மும்பை, புதுடெல்லி உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களில் இருந்து இந்த பொருட்காட்சிக்கு வருகை புரிந்து இந்த பொருட்காட்சி விழாவை சிறப்பித்தனர்.







■ இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி வட்டம் நயினார் கோவில் ஊராட்சி காரடர்ந்தகுடி குருநாதண் கவிதா தம்பதியரின் மகள் குரு. அனுஸ்ரீ இவர் பரமக்குடியில் செயல்பட்டு வரும் ஆயிரவைசிய மெட்ரிக் மேல்நிலை பள்ளிமாணவி 8ம்வகுப்பு பயின்று வருகிறார். இவ்மாணவி கடந்த 5வருடங்களாக கராத்தே போட்டியில் ஆர்வம் கொண்டு தமிழகம் பாண்டிச்சேரி. டெல்லி ஆகிய நகரங்களில் நடைபெற்ற கராத்தே போட்டியில் 28மெடல் பெற்றுள்ளார். தேசிய அளவிலான கராத்தே போட்டிக்கு மூன்று முறை தேர்வாகி. டெல்லி.தல்கட்டோரா. உள்விளையாட்டரங்கில். நடைபெற்ற தேசிய அளவிலான கராத்தே போட்டியில் வெண்கல பதக்கம் வென்றார். இதுவரை 28மெடல் பெற்றுள்ளார். மாணவி அனுஸ்ரீ தமிழக முதல்வரையும் துனை முதல்வரையும் நேரில் சந்தித்து வாழ்த்துபெற்று பரிசு பெற விரும்புகிறார். மாணவியின் கோரிக்கைக்கு முதல்வர் செவி சாய்ப்பாரா என்ற எதிர்பார்ப்பில் மாணவி அனுஸ்ரீ காத்துக் கொண்டிருக்கிறார்..






"கலைஞர் கைவினைத் திட்டத்தில் தொழிற்கடன் பெற்று

# தொழில் துவங்க/விரிவாக்கம் செய்ய மாவட்ட ஆட்சித்தலைவர் அழைப்பு!

திருப்பூர், ஜூலை.24-

திருப்பூர் மாவட்டத்தில் கைவினைக் கலைகள் மற்றும் தொழில்களில் உள்ளோருக்கு சுய வேலைவாய்ப்பை உருவாக்கும் பொருட்டு 'கலைஞர் கைவினைத்திட்டம்'' மாவட்ட தொழில் மையம் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

இத்திட்டத்தின்கீழ் ரூ.3.00 இலட்சம் வரை பிணையற்ற கடனுதவி மற்றும் ரூ.50,000/ வரை மானியம் பெறலாம். 5% வரை வட்டிமானியம் வழங்கப்படும். இத்திட்டத்தின் கீழ் விண்ணப்பிக்கும் தொழில் முனைவோர்களுக்கு திறன்மேம்பாட்டிற்கான சிறப்பு பயிற்சிகள் வழங்கப்படும். இத்திட்டத்தின்கீழ் விண்ணப்பிக்க 35 வயது நிரம்பியவராக இருக்க வேண்டும். எந்த வகுப்பினராகவும் இருக்கலாம்.

இத்திட்டத்தின்கீழ் வேலை, தையல் கட்டிட வேலைகள், மரவேலைப்பாடுகள், பாரம்பரிய முறையில் ஜவுளி அச்சிடுதல், தோல் கைவினைப் பொருட்கள், காலணிகள் தயாரித்தல், மீன் வலை தயாரித்தல், நகை செய்தல், சிகையலங்காரம், அழகுக்கலை, துணி நெய்தல், துணிகளில் கலைவேலைப்பாடுகள். சுதை வேலைப்பாடுகள், பூட்டு தயாரித்தல்,, கூடை முடைதல், கயிறு பாய் பின்னுதல், துடைப்பான் செய்தல், மட்பாண்டங்கள், சுடுமண் வேலைகள், பொம்மைகள் தயாரித்தல், படகுக் கட்டுமானம்,

துணி வெளுத்தல், துணி தேய்த்தல், சிற்ப வேலைப்பாடுகள், கற்சிலை வடித்தல், ஓவியம் வரைதல், வண்ணம் பூசுதல், பழங்குடியினரின் இயற்கை சேகரிப்புகள், கண்ணாடி வேலைப்பாடுகள், பாரம்பரிய இசைக்கருவிகள் தயாரித்தல், மலர் வேலைப்பாடுகள், உலோக வேலைப்பாடுகள், பாசிமணி வேலைப்பாடுகள், கைவினைப்பொருட்கள், மூங்கில், பிரம்பு, சணல், பனை வேலைப்பாடுகள் போன்ற தொழில்கள் துவங்க விண்ணப்பிக்கலாம்.

11.12.2024 அன்று தொடங்கப்பட்ட இத்திட்டத்தில் இதுவரை 526 ஒப்பளிப்பு ஆணைகள் பெறப்பட்டு 192 நபர்களுக்கு திறன்மேம்பாட்டு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. இதில் 85 நபர்களுக்கு கடன் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது.

தற்பொழுது நடைபெற்று வரும் "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாம்களில் பங்கேற்று குறு,சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை சார்பில் அமைக்கப்பட்டிருக்கும் அரங்கில் உள்ள மாவட்ட தொழில் மைய அலுவலர்களை அணுகி இத்திட்டத்தின்கீழ் விண்ணப்பிக்கலாம்.

தகுதியான பொதுமக்கள் இத்திட்டத்தின் மூலம் புதிய தொழில் துவங்கவும், தொழிலை மேம்படுத்தவும் இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்தி கொள்ளுமாறு டாக்டர். மனிஷ் மாவட்ட ஆட்சித்தலைவர் நாரணவரே,இ.ஆ.ப. அவர்கள் அழைப்பு விடுத்துள்ளார்கள்.

மேலும் விவரங்கள் பெறவும், கூடுதல் வழிகாட்டுதலுக்கும் 04212475007, 89255 34024, 8925534025 ஆகிய அலுவலக எண்களை தொடர்பு கொள்ளலாம்.

# ஸ்ரீ சாய்ராம் கல்லூரியில் தேசிய அளவில் மாணவர்களுக்கான வாகன வடிவமைப்பு போட்டி தொடக்க விழா

தாம்பரம் ஜூலை.24-

செங்கல்பட்டு மாவட்டம் மேற்கு தாம்பரம் ஸ்ரீசாய்ராம் பொறியியல் கல்லூரியில் தேசிய அளவிலான வாகவடிவமைப்பு போட்டி ஸ்ரீ சாய்ராம் கல்வி குழும முதண்மை செயல் அதிகாரி சாய்பிரகாஷ் லியோ முத்து தலைமையில் நடைபெற்றது. இந்திய ஆட்டோமோட்டிவ் பொறியாளர்கள் சங்கம் சார்பில் ஆண்டுதோறும் நடத்தப்படும் போட்டி, பொறியியல் மாணவர்களின் ஆட்டோமொபைல் தொழில்நுட்பத் திறனை மேம்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கிறது என தலைவர் பால் ராஜ் சுப்பிரமணியம் கூறினார்.

தேசிய அளவில் 3 நாள்கள் நடைபெறும் கல்லூரி மாணவர்களுக்கான வாகன வடிவமைப்பு போட்டியை ரெனால்ட் நிசான் நிறுவன துணைத் தலைவர் என்.பாலசுப்ரமணியன், ஹோண்டா மோட்டார்ஸ் சந்திரசேகர் ஆகியோர் தொடக்கி வைத்து மாணவர்களின் புதிய வடிவமைப்பு வாகனத்தை திறந்து வைத்து அதனை பார்வையிட்டனர். தொடக்க விழாவில் முதல்வர்கள் முனைவர் ராஜா, முனைவர் பழனிகுமார், மாணவர்களின் விவகாரதுறை தீன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பின்னர் ஆட்டோமோட்டிவ் பொறியாளர்கள் சங்கத் தலைவர் பால்ராஜ் சுப்பிரமணியம் பேசியதாவது தற்போது ட்ரோன் மூலம் பறக்கும் வாகன தயாரிப்பு குறித்த மாணவர்களின் செயல்திட்டம் உருவாக்கும் திட்டம் உள்ளது.

ஏற்கனவே நடைபெற்ற போட்டிகளில் பங்கேற்ற மாணவர்கள் தற்போது இந்திய வாகனத் தயாரிப்பு நிறுவனங்களில் மட்டுமல்லாமல், சர்வதேச அளவில் புகழ்பெற்ற பிஎம்டபிள்யூ,டெஸ்லா உள்ளிட்ட பல்வேறு நிறுவனங்களில் பணியாற்றும் வாய்ப்பைப் பெற்றுள்ளனர் என்றார் அவர்.

ஸ்ரீசாய்ராம் கல்விக் குழுமத் தலைவர் சாய் பிரகாஷ் லியோ முத்து பேசுகையில், ஆட்டோமொபைல் துறையில் இந்திய அளவில் மட்டுமல்லாமல் சர்வதேச அளவில் வாய்ப்புகள் அதிகரித்துள்ளது.போட்டியில் இயந்திரவியல் மாணவிகள் அடங்கிய 27 குழு மாணவர்கள் போட்டியில் பங்கேற்க உள்ளனர் என்றார்.




# வேலூரில், விடுதலை சிறுத்தைகள் கட்சி சார்பில் செயற்குழு கூட்டம்

வேலூர், ஜூலை.24-

வேலூர் மாவட்டம், வேலூர் அண்ணா சாலை ஏலகிரி அரங்கில் வேலூர் ஒருங்கிணைந்த வேலூர் மாவட்ட விடுதலை சிறுத்தைகள் கட்சி சார்பில் திருச்சியில் நடைபெறவுள்ள மதசார்பன்மை காப்போம் பேரணி விளக்க பொதுக்கூட்டம் வருகிற 29ஆம் தேதி அண்ணா சாலை, அண்ணா கலையரங்கம் அருகில் நடத்துவது குறித்து வேலூர் ஒருங்கிணைந்த மாவட்ட நிர்வாகிகள் பொதுக்குழுகூட்டம் வேலூர் மாநகர மாவட்ட செயலாளர் வேலூர் பிலீப், தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாநில பொறுப்பாளர்கள் பாசறை செல்வராஜ், ரத்தின நற்குமரன், மேற்கு மாவட்ட விசிக செயலாளர் குடியாத்தம் சுதாகர், கிழக்கு மாவட்ட செயலாளர் கோவேந்தன் கோட்டி,, மாவட்ட விசிக துணைச் செயலாளர் இளங்கோ, மாவட்ட மகளிர் அணி செயலாளர் மலர்கொடி, ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். மேலும், இக்கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளராக மாநில செயலாளர் நீல. சந்திரகுமார், கலந்துகொண்டு கூட்டம் நடத்துவது குறித்து ஆலோசனை வழங்கினர். இநிகழ்ச்சியில் மாநில பொதுக்குழு உறுப்பினர்கள் ஜாபீர், கிறிஸ்துவ பேரவை மாவட்ட செயலாளர் அல்போன்ஸ், பகுதி செயலாளர்கள் அமல்ராஜ், விஜய சாரதி, ஊடக பிரிவு விமல்குமார், பூஞ்சோலை கர்ணா உள்ளிட்ட மாநில மாவட்ட பகுதி ஒன்றிய விடுதலை சிறுத்தை கட்சியின் நிர்வாகிகள் பொறுப்பாளர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்




# காட்பாடி வடக்கு பகுதி திமுக இளைஞரணி சார்பில், இளைஞரணி அமைப்பாளர் எம்.காளிதாசன் தலைமையில் தெருமுனை கூட்டம்!

காட்பாடி. ஜூலை. 24

வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, காட்பாடி வடக்கு பகுதி திமுக இளைஞரணி சார்பில் கலைஞரின் 102 வது பிறந்தநாள் விழா மற்றும் தமிழக முதல்வர் முக.ஸ்டாலினின் 4 ஆண்டு சாதனை விளக்க தெருமுனை கூட்டம், காட்பாடி வடக்கு பகுதி இளைஞரணி அமைப்பாளர் எம்.காளிதாசன் தலைமையிலும், காட்பாடி வடக்கு பகுதி செயலாளர் ஜி.வன்னியராஜா புஷ்பலதா முன்னிலையிலும் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் காட்பாடி பகுதி அமைப்பாளர்கள் எஸ்.ராஜேஷ், ஜெகதீசன், ஜே.புவனேஸ்வரன் ஜி, ராஜேஷ், எஸ்.ஜெய்சங்கர் அஸ்வின் பால்ராஜ், விஜய் பிராங்கிளின், வட்ட செயலாளர் மகேஸ்வரன், மாமன்ற உறுப்பினர் ஜி.ரவிக்குமார் மற்றும் திமுக நிர்வாகிகள், உறுப்பினர்கள் என பலர் கலந்து கொண்டு இக்கூட்டத்தை சிறப்பித்தனர். இறுதியில் பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் எஸ்.ஜெயசங்கர் நன்றியுரையாற்றி தெருமுனை பிரச்சாரக் கூட்டம் நிறைவுபெற்றது.

# உங்களுடன் ஸ்டாலின்" சிறப்பு திட்ட முகாம் : நாளை காரைக்குடி மாநகராட்சி, திருப்புவனம் பேரூராட்சி மற்றும் திருப்பத்தூர், சிவகங்கை, கண்ணங்குடி, சிங்கம்புணரி ஊராட்சி ஒன்றியங்களில் நடைபெறவுள்ளது




சிவகங்கை ஜூலை.24-

தமிழ்நாடு முதலமைச்சர் அறிவிக்கப்பட்டுள்ள ''உங்களுடன் ஸ்டாலின்'' சிறப்பு திட்ட முகாமானமது, சிவகங்கை மாவட்டத்தில் 15.7.2025 அன்று முதல் செப்டம்பர் 2025 வரை ஒவ்வொரு வாரமும், நான்கு நாட்களில் நாள் ஒன்றுக்கு 6 முகாம் வீதம் மொத்தம் 215 முகாம்கள் நடைபெறவுள்ளது.

அதன்படி, 15.7.2025 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் தொடங்கி வைக்கப்பட்டுள்ள ''உங்களுடன் ஸ்டாலின்'' திட்ட முகாமினை தொடர்ந்து, வருகின்ற ஜூலை 25ஆம் தேதி காரைக்குடி மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்: 15,17,18 ஆகிய பகுதிகளுக்கென ஸ்ரீ தேவேந்திரன் மஹாலிலும், திருப்புவனம் பேரூராட்சிக்குட்பட்ட வார்டு எண்: 1,2,3,8,9 ஆகிய பகுதிகளுக்கென திருப்புவனம் மருதுபாண்டியர் மஹாலிலும், திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளுக்கென திருக்காளப்பட்டி சமுதாயக்கூடத்திலும், சிவகங்கை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளுக்கென கண்டாங்கிப்பட்டி பல்வகை பயன்பாட்டு நிலையத்திலும், கண்ணங்குடி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளுக்கென கண்ணங்குடி உயர்நிலைப்பள்ளியிலும், சிங்கம்புணரி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளுக்கென பிரான்மலை சமுதாயக்கூடத்திலும் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமானது நடைபெறவுள்ளது.

மேலும், ''உங்களுடன் ஸ்டாலின்" முகாம்களின் வாயிலாக, நகர்புறம் மற்றும் கிராமப்புறங்களில் அந்தந்த துறைகளால் சேவைகள் வழங்கப்படும். அதில், நகர்புறங்களில் நடத்தப்படும் முகாம்களில் 13 துறைகளின் மூலம் 43 சேவைகளும், கிராமப்புறங்களில் நடத்தப்படும் முகாம்களில் 15 துறைகளின் மூலம் 46 சேவைகளும் வழங்கப்படவுள்ளது.

இதில் சொத்துவரி, குடிநீர் வசதி உரிமங்கள் மற்றும் அனுமதி, கழிவு நீர் இணைப்பு, அடிப்படை வசதிகள், பராமரிப்பு, பிறப்பு இறப்பு சான்றிதழ்கள், காலி மனைவரி, தெரு வியாபாரி அடையாள அட்டை, சொத்து வரி பெயர் மாற்றம் மற்றும் கட்டிட அனுமதி பெறுவதற்கான விண்ணப்பம் ஆகியவைகள் நகர்புற நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் வாயிலாக வழங்கப்படவுள்ளது.

மேலும்,பட்டாவில் பெயர் மாற்றம் மற்றும் பட்டா பெயர் திருத்தம், பட்டா சிட்டா நகல், பிறப்பு, இறப்பு சான்று வாரிசு சான்றிதழ், சாதிச் சான்றிதழ், இருப்பிடச் சான்றிதழ் உள்ளிட்ட மனுக்களுக்கு இம்முகாமில் உடனடி தீர்வு காணும் வகையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. அதுமட்டுமன்றி, குறிப்பாக கலைஞர் மகளிர் உரிமைத்திட்டத்தில் மனு அளித்திட விடுபட்ட தகுதியுள்ள பயனாளிகளும் இம்முகாம்களில் உரிய ஆவணங்களுடன் கலந்து கொண்டு மனு அளிக்கலாம்.

எனவே, இம்முகாமினை முறையாக பயன்படுத்திக் கொண்டு, தாங்கள் வசிக்கும் அந்தந்த பகுதியில் முகாம் நடைபெறும் நாளன்று, உரிய ஆவணங்களுடன் தங்களது கோரிக்கை மனுக்களை அளித்து பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சியர் கா.பொற்கொடி, தெரிவித்துள்ளார்.

## அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் ஆட்சியர் திடீர் ஆய்வு கழிவறை கதவுகளை சரி செய்யவும், லிப்ட்டை சரி செய்யவும் உத்தரவு



■ சிவகங்கை மாவட்டம், சிவகங்கை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் ஆட்சியர் பொற்கொடி திடீர் ஆய்வு. கழிவறைகளில் கதவு இல்லாததை கண்டு அதிர்ச்சி. கதவுகளை பொருத்தவும் லிப்ட்டை உடனடியாக செயல்படுத்த நடவடிக்கை எடுக்கவும் பொதுப்பணித்துறை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

## தேனி மாவட்டம்உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தின் கீழ் காமயகவுண்டன்பட்டி பேரூராட்சியில் நடைபெற்ற முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங்,கலந்து கொண்டு பார்வையிட்டார்

தேனி. ஜூலை.24-

தேனி மாவட்டம், காமயகவுண்டன்பட்டி பேரூராட்சி வார்டு 1, 2, 3, 4, 5, 6, 7 ஆகிய பகுதிகளுக்கு சுருளி சாலையில் உள்ள சமுதாயக்கூடத்தில் அன்று (22.07.2025) நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் .ரஞ்ஜீத் சிங்,கலந்து கொண்டு பார்வையிட்டார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அரசின் சேவைகள் விரைவாகவும், எளிதாகவும் பொதுமக்களை, சென்று சேரும் வகையில் உங்களுடன் ஸ்டாலின் என்ற புதிய திட்டத்தினை 15.07.2025 அன்று தொடங்கி வைத்தார்கள். இம்முகாம்கள் மூலம் நகர்பகுதிகளுக்கு 13 துறைகளில் 43 சேவைகளும், கிராமப்பகுதிகளுக்கு 15 துறைகளில் 46 சேவைகளும் வழங்கப்படவுள்ளது. கலைஞர் மகளிர் உரிமைத் தொகைப் பெற தகுதியுள்ள பெண்களும் இம்முகாம்களில் விண்ணப்பித்து பயன்பெறலாம்.

ஐந்தாம் நாளாக இன்றையதினம் பெரியகுளம் நகராட்சி வார்டு 5, 6, 7 ஆகிய பகுதிகளுக்கு, வடகரை கோவிந்தம் மயில்தாயம்மாள் மண்டபத்திலும், ஹைவேவிஸ் பேரூராட்சி வார்டு 1, 2, 3, 4. 5, 6, 7 ஆகிய பகுதிகளுக்கு மிநி மண்டபத்திலும், க.மயிலாடும்பாறை ஊராட்சி ஒன்றியம் தும்மகுண்டு, முருக்கோடை ஆகிய பகுதிகளுக்கு வருசநாடு வேணியம்மன் கோவில் மண்டபத்திலும், ஆண்டிபட்டி ஊராட்சி ஒன்றியம் இராஜகோபாலன்பட்டி ஊராட்சிக்கு கொண்டமநாயக்கன்பட்டி கிருஷ்ணா மஹாலில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்கள் நடைபெற்றது.



மாவட்ட ஆட்சித்தலைவர் காமயகவுண்டன்பட்டி பேரூராட்சியில் நடைபெற்ற முகாமில் கலந்து கொண்டு, மனு அளித்தவர்களுக்கு உடனடி தீர்வாக குடும்ப அட்டை, மின் இணைப்பு பெயர் மாற்றம், தொழிலாளர் நல வாரிய அட்டை உள்ளிட்ட அரசின் நலத்திட்ட உதவிகளை பயனாளிகளுக்கு வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து, கோம்பை பேரூராட்சி சிக்கச்சியம்மன் கோயில்மேடு பகுதியில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள குடியிப்பு பகுதியில் ஆய்வு மேற்கொண்டு, அடிப்படை வசதிகள் குறித்து அப்பகுதி மக்களிடம் கேட்டறிந்தார். பின்னர், சின்னமனூர் ஊராட்சி ஒன்றியம் எரசக்கநாயக்கனூரில் ரூ.1.32 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தினை, நேரில் பார்வையிட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு விரைந்து கொண்டுவர நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு துறை அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அறிவுறுத்தினார்.

முன்னதாக, கம்பம் ஆதிசுஞ் சனகிரி மகளிர் கல்லூரியில் மகளிர் திட்டம் சார்பில் மகளிர் சுய உதவிக்குழுக்களின் உற்பத்தி பொருட்கள் விற்பனை மற்றும் கண்காட்சியினை மாவட்ட ஆட்சித்தலைவர் கம்பம் சட்டமன்ற உறுப்பினர் .என் .இராமகிருஷ்ணன் முன்னிலையில் தொடங்கி வைத்து, மகளிர் உற்பத்தி பொருட்களான பேன்சி ரகங்கள், கைவினைப் பொருட்கள், வீட்டு உபயோகப்பொருட்கள், மென்பொம்மைகள், கவரிங் நகைகள், உள்ளிட்ட பல்வேறு விற்பனை அரங்குகளை பார்வை யிட்டார்கள்.

இந்நிகழ்வுகளில், உத்தமபாளையம் வருவாய் கோட்டாட்சியர் . செய்யது முகமது, பேரூராட்சித் தலைவர் .வேல்முருகன், வட்டாட்சியர்கள் .கண்ணன் (உத்தமபாளையம்), அர்ஜூனன் (ச.பா.தி.), செயல் அலுவலர் .பஷீர் அஹமது, வட்டார வளர்ச்சி அலுவலர் (சின்னமனூர்) ஆண்டாள், மருத்துவ அலுவலர் மரு.ஜெகதீஸ்வரி, சுகாதார அலுவலர் .ரசீத்ராஜா, உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



■ மதுரை மாவட்டம் டி.கல்லுப்பட்டி ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்ட எல்.கொட்டாணிப்பட்டி உள்ளிட்ட 7 கிராமஊராட்சிகளுக்கு நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு திட்ட முகாமில் பேரையூர் வட்டாட்சியர் செல்ல பாண்டியன் கல்லுப்பட்டி ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர் ராஜ சேகரன், கொட்டணிப்பட்டிஊராட்சி செயலாளர் அர்ஜுனன் காரைக்கேணி செயலாளர் சேகர் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



## தாம்பரம் மாநகராட்சி, 4வது மண்டலத்திற்கு உட்பட்ட 33வது மற்றும் 50வது வார்டு சார்பில் உங்களுடன் ஸ்டாலின் முகாம்

தாம்பரம் ஜூலை.24-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி உங்களுடன் ஸ்டாலின் என்ற புதிய திட்டத்திற்க்கான சிறப்பு முகாமை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சிதம்பரத்தில் துவக்கி வைத்ததை தொடர்ந்து தாம்பரம் மாநகராட்சி, 4வது மண்டலத்திற்கு 33வது மற்றும் 50வது வார்டு ஆகிய வட்டங்களில் தாம்பரம் மாநகர செயலாளர், தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா அவர்கள் உங்களுடன் ஸ்டாலின் என்ற புதிய திட்டத்திற்க்கான சிறப்பு முகாமை துவக்கி வைத்து, பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். மேலும் முகாமில் தீர்வு காணப்பட்ட மனுக்களுக்கு சான்றிதழ்களை வழங்கினார் இந்த நிகழ்ச்சியில் தாம்பரம் மாநகர மேயர் க.வசந்தகுமாரி, 4வது மண்டல குழு தலைவரும், பெருங்களத்தூர் வடக்கு பகுதி செயலாளருமான டி.காமராஜ், மாமன்ற உறுப்பினர்கள் சி.சுரேஷ், மு.யாக்கூப் வட்ட செயலாளர்கள் மு.வினோத், ஆர்.ஜீவன் பகுதி கழக நிர்வாகிகள், அரசு அதிகாரிகள், வட்ட செயலாளர்கள், கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.




## வேலூர் சத்துவாச்சாரி டபுள் ரோட்டில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்

வேலூர், ஜூலை.24-

வேலூர் மாவட்டம் வேலூர் மாநகராட்சி, மண்டலம் 2, சத்துவாச்சாரி டபுள் ரோடு பாலாஜி மஹாலில் நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமில் மின் இணைப்பு பெயர் மாற்றம் வேண்டி மனு அளித்த பயனாளிக்கு உடனடியாக பெயர் மாற்ற ஆணை யினை மாவட்ட ஆட்சியர் சுப்புலட்சுமி கலந்து கொண்டு இந்த ஆணை யினை வழங்கினார். இந்நிகழ்வின்போது வேலூர் சட்டமன்ற உறுப்பினர் கார்த்திகேயன், மாநகராட்சி ஆணையர் இலட்சுமணன், மக்கள் பிரதிநிதிகள், வேலூர் இணை ஆணையர் சதிஷ், சுகாதார அலுவலகம் சிவக்குமார், அனைத்து துறைகள் சார்ந்த அலுவலர்கள் பணியாளர்கள் என பலர் கலந்து கொண்டு பொதுமக்களின் புகார் மனுக்களை பெற்று பதிவேற்றம் செய்து குறைகளின் பெயரில் தீர்வு காண நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.




## வேலூரில் தமிழிசை, ரோட்டரி சங்க விழாவில் கலந்துகொண்டு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரை

வேலூர், ஜூலை.24-

வேலூர் மாவட்டம், சத்துவாச்சாரி, ஏஞ் சல்ஸ் ரோட்டரி சங்கம் சார்பில்2025 26 ஆண்டிற்கான புதிய நிர்வாகிகள் பதவியேற்பு விழா மற்றும் ரோட்டரி சங்கம் சார்பில் 10ம் வகுப்பு மற்றும் 12ம் வகுப்பில் அதிக மதிப்பெண்கள் பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசளிப்பு மற்றும் பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் தமிழக மூத்த பிஜேபி தலைவரும், தெலுங்கானா முன்னாள் ஆளுநர் தமிழிசை கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். முன்பாக செய்தியாளர்களை சந்தித்து பேசினார். இதில் மாவட்ட பிஜேபி தலைவர் தசரதன் மற்றும் முக்கிய கட்சி நிர்வாகிகள், ரோட்டரியை சேர்ந்தவர்கள் என பலர் பங்கேற்றனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161